விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 27 வியாழக்கிழமை (11.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 23

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## கடத்தப்பட்ட பல்கலை மாணவன் நேற்று காலை விடுவிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் கடந்த 3ஆம் திகதி கடத்தப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜ் நேற்று அதிகாலை விடுவிக்கப்பட்டுள்ளார். நேற்று அதிகாலை 2 மணியளவில் அவரது வீட்டிற்கு முன்னே வந்து நின்ற வாகனத்திலிருந்து இறக்கிவிடப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

உடலில் மிகமோசமான அடிகாயங்கள் காணப்படுவதாகவும், பேசமுடியாத நிலையில் அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி மனித உரிமை ஆணைக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான சட்டங்களை மதித்து பொதுமக்களை பாதுகாக்க வேண்டும்

### செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

(ஜெனீவா)

மோதல்களில் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் சர்வதேசட்டங்களுக்கமைவான பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தமது கடமைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த 5,6 ஆம் திகதிகளில் இடம் பெற்ற பஸ் குண்டுவெடிப்புகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது கவலையையும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜெனீவா தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே (04 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினையில் தலையிட இந்தியாவுக்கு உரிமையில்லை

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக படுகொலைகளை நடத்தி வரும் இந்திய அரசாங்கத்துக்கு இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரச்சினையில் தலையிடுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என ஜே.வி.பி. தெரிவித்துள் ளது.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் விருப்பத்துக்கு அமைய வட.கிழக்கை ஒரு அலகாக கருதுக

### இரா.சம்பந்தன் கோரிக்கை

(கொழும்பு)

இந்தியா-இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தாது வட கிழக்கை பிரிக்கத்தீர்மானித்தமை நியாயமற்றது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

அதனால் மக்களின் விருப்பத்திற்கு அமைவாக வடக்கு கிழக்கு ஒரே அலகாக கருதி செயற்படுமாறு அவர் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கு கிழக்கு மாணங்களில் தற்போதைய நிலைமை தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஒத்திவைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாறும்போதே அவர் (04 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவிலிருந்து வரும் பொருட்களை ஊர்காவற்றுறையில் இறக்க அரசு முயற்சி

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்படும் உணவுப் பொருட்களை ஊர்காற்றுறை துறைமுகத்தில் இறக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்படும் பொருட்கள் காங்கேசன் துறை முகத்திலேயே இறக்கப்படுகின்றன. இத்துறை முகத்தில் இறக்கப்படும் பொருட்கள் பல்வேறு காரணங்களாக தாமதமடைவதனால் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் இறக்க தீர்மானித்துள்ளதாகவும் இதன் காரணமாக விரைவாக பொருட்களை இறக்குவதுடன் விநியோகிப்பதும் இலகுவானது எனவும் அரசினால் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு எடுத்துரைத்துள்ளதாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## இத்தாலி அமைச்சர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இத்தாலி உதவி வெளிவிவகார அமைச்சர் ஜிகானி வோர்னெடி மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார். இவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து சமாதான பேச்சுவார்த்தைகளின் தலைமை மற்றும் சர்வதேச விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

நாளைய வலம்புரியில்
அழகிய வர்ணக் கலண்டர் வெளிவரும்
தவறாது கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## ஆனைக்கோட்டையில் நேற்று கிளைமோர்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பகுதியில் நேற்று காலை 8.15 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இதில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்துள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு தூர இயக்கும் கருவி மூலம் வீதி சோதனைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்கு வைத்து வெடிக்கவைக்கப்பட்டுள்ளது. காயமடைந்த இராணுவ வீரர் யாழ்.பொதுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக ஊடக மத்திய நிலையம்மேலும்தெரிவித்துள்ளது. (ச-5)

# உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஜன.27 இல் காலியில் நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாடு இந்த வருடம் காலியில் நடத்தப்படவுள்ளது. இம் மாதம் 27ம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை காலியில் உள்ள வெளிச்ச வீட்டு விருந்தினர் விடுதியில் இந்த மகாநாடு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் அமெரிக்கா, பிரித்தானியா, யப்பான், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல்வேறு நாடுகளினதும் 300 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். கடந்த வருடம் இந்த நாடுகளினால் 120 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியினை அரசாங்கம் பெற்றிருந்தது.

இந்த வருடம் அதனை விட கூடுதலான நிதி உதவியினை அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தெரியவந்துள்ளது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அபிவிருத்தி பணிகளுக்கு பெருமளவு நிதி உதவியினை வழங்கி வருவதால் இலங்கை அரசாங்கம் தனது சொந்த வருமானத்தில் யுத்த தளபாடங்களை அதிகளவில் வாங்கி வருவதாக சர்வதேச பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனை தெளிவாக புரிந்து கொண்டுள்ள உதவி வழங்கும் நாடுகள் இம்முறை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கும் அளிவிற்கு உதவிகளை வழங்காது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை அரசாங்கம் மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கைகளை கைவிட்டால் மட்டுமே முழுமையான உதவித் தொகைகளை வழங்க முடியும் என்று உதவி வழங்கும் நாடுகள் அறிவிப்பதற்கான வாய்ப்புக்கள் தோன்றியுள்ளதா (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அகவை '91' காணும் அமரர் 'எம்.ஜி.ஆர்.உலா!'



தனது திரைப்படங்களையே மக்களின்

வகுப்பறைகள் ஆக்கி;

அரசியற் பாடத்தை அழகுறக் கற்பித்து;

ஆட்சியைப் பிடித்து

அரியணை ஏறிய

"வாத்தியார்" எம்.ஜி.ஆர்.

"வந்துதித்த திருநாள்" இன்றாம்!

வேண்டுவோர்க்கு வேண்டிய வண்ணம்;

தக்க சமயத்தில் தருணம் உணர்ந்து;

அள்ளிக் கொடுத்தே அனைவரையும் வசப்படுத்திய

"வள்ளல் திருமகனின்"

வாழ்வியலே தனி!

அவன் போல் எவருமே

'வாரார் இனி!!'

வாழ்த்திப் பாடுவது,

11.01.2007 ஜெ.கி.ஜெயசீலன்.



சிவாஜி கணேசன் – ஜெமினி கணேஷ் – எம்.ஜி.ஆர். – இயக்குநர் ஏ.பீம்சிங்.

(–720)


# ஏ-9 பாதையைத் திறக்கக் கோரி நியூசிலாந்தில் போராட்டம்

ஏ-9,ஏ-15 வீதிகளை மூடி தமிழ் மக்களை பட்டினியடையச் செய்தமையைக் கண்டித்தும் அவற்றைத் திறக்கக் கோரியும்கடந்த சனிக்கிழமை நியூசிலாந்தில் கவலையீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

நியூசிலாந்துக்குச் சென்றுள்ள இலங்கைக் கிரிகெட் அணியினர் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இந்தப் போராட்டம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கவனயீர்ப்புப் போராட்டத்தின்ஒரு பகுதியாக விமானம் மூலம் இலங்கைத் தமிழ் மக்கள் மீதான படுகொலையை நிறுத்து என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கொடியைப்பறக்க விட்டவாறு வலம் வந்தது.

இதனிடையே வாசக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் ஒக்கிலாந்து நகரத்தின் மத்தியில் தமிழ் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இழைக்கும் கொடுமைகள் பற்றிய துண்டுப்பிரசுரங்கள் நியூசிலாந்து நாட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(ச-5)

# முத்திரைக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

நடப்புக் காலாண்டுக்கான தபால் முத்திரைகள் கொழும்பு பிரதம தபாலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படாததால் குடாநாட்டில் தபால் முத்திரைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

20 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் கையிருப்பில் இருக்க வேண்டிய நிலையில் தற்பொழுது ஒரு லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளே கையிருப்பில் உள்ளன.

கையிருப்பிலுள்ள முத்திரைகளில் 20 ரூபா , நூறு ரூபா பெறுமதியான முத்திரைகள் மட்டுமே உள்ளன. அதிகம் பாவிக்கப்படும் ஐந்து ரூபா அதற்குக் குறைவான பெறுமதியுள்ள முத்திரைகள் தற்பொழுது முற்றாக முடிபடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களால் கப்பல் மூலம் முத்திரைகளை கொழும்பிலிருந்து எடுத்துவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. (ச-3)

# எடுத்து வரப்பட்ட எழுது கருவிகள் வலயங்கள் ரீதியாக பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட எழுது கருவிகள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென கல்வி வலயங்களுடாக பகிர்ந்தளிக்கப்பட்டதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

80 பக்கங்களைக் கொண்ட 36 ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளும், 4 லட்சத்து 58 ஆயிரம் பேனாக்களுமே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்கு 13 ஆயிரத்து 200 அப்பியாசக் கொப்பிகளும், 3 லட்சத்தது 70 ஆயிரம் பேனாக்களும், தீவக வலயத்திற்கு 3 ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளும், 39 ஆயிரம் பேனாக்களும், வலிகாம கல்வி வலயத்திற்கு 9 ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளும், ஒரு லட்சத்து 24 ஆயிரம் பேனாக்களும், வடமராட்சி கல்வி வலயத்திற்கு 6 ஆயிரம் அப்பியாசக் கொப்பிகளும், 77 ஆயிரம் பேனாக்களும், தென்மராட்சி கல்வி வலயத்திற்கு 4 ஆயிரத்து 800 அப்பியாசக் கொப்பிகளும், 58 ஆயிரம் பேனாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

அப்பியாசக் கொப்பிகள் ஒன்று 15 ரூபாவுக்கும்,பேனா ஒன்று 10 ரூபாவுக்கும் வழங்கப்படவுள்ளது.

தற்போது ஒரு தொகுதி பென்சில்கள் எடுத்துவரப்பட்டு யாழ்.கல்வி வலயத்திலுள்ளது. அவை ஓரிரு தினங்களில் ஐந்து கல்வி வலயங்கள் ஊடாக அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பென்சில் ஒன்று 5 ரூபாவிற்கு வழங்கப்படவுள்ளது. (ச-3)

# ஒரு தொகுதி சீருடைத்துணி யாழ்.வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி சீருடைகள் எடுத்துவரப்பட்டுள்ளன. அவை ஓரிரு தினங்களுக்குள் கல்வி வலயங்களூடாக பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

தரம் 9க்கு உட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான சீருடைகளே கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் அவை கல்வி வலயங்கள் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர்கூறினார்.

இதேவேளை ஏனைய மாணவர்களுக்கான சீருடைகளும் பாடப் புத்தகங்களும் அடுத்து வரும் கப்பலில் எடுத்து வரப்படலாம் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ச-3)

# புத்தளத்தில் 18 பேர் கைது!

புத்தளம் மாவட்டத்தில் உடப்பு தமிழ்க் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் புத்தள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றொசாந் பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணி முதல் மதியம் 12 மணிவரை இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவதாக முந்தல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

# கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் 6 ஆம் 7 ஆம் அணிகளுக்கான கலந்துரையாடல் நாளைக் காலை 10 மணிக்கு விளையாட்டு விஞ்ஞான அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் இரு அணிகளைச் சேர்ந்த மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.(ச)

# கௌரவிப்பு விழா

(பருத்தித்துறை)

நடராசா வள்ளியம்மாள் கல்வி ஊக்குவிப்பு நிதியத்தின் அனுசரணையுடன் வல்வை.ஆதிகோவிலடி வாழ் மக்கள் நடாத்தும் பொன் விழாத் தம்பதிகளையும் கல்வி சார் மாணவர்களையும் கௌரவிக்கும் விழா எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை ஆதி வைரவர் கோவிலடியில் மாதர் சங்கச் செயலாளர் திருமதி உஷா சிவபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கே.மயிலேறும்பெருமாள் கலந்து கொள்ளவுள்ளார். (ச-3)


## மேலும் ஒரு சேவையாக அம்புலன்ஸ் வசதி

யாழ்.நகர், வலிகாமம் பகுதி மக்களுக்கு வழங்கப்படுகிறது. வீட்டிலிருந்து வைத்தியசாலைக்கும் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு செல்வதற்கும் சேவை வழங்கப்படும்.

விபரங்களுக்கு;

தொலைபேசி இல.:-222 2263 அல்லது

நேரில் தொடர்பு கொள்ளவும்.

சென்றல் நர்ஸிங் ஹோம்,
350,பலாலி வீதி,
திருநெல்வேலி.

(721)

கட்டுப்பாடான சரியான வழியில் நம்மை நடத்திக் கொண்டால் பண்பு வளரும், இல்லை என்றால் நேர்மாறான விளைவுகள்தான் உண்டாகும்.

-பிளேட்டோ

வலம்புரி

# பொதுத் தேர்தலுக்கான சுபநேரம் வந்துவிட்டதா?

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்தும் எண்ணம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இருப்பதாக கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுச் சேர்ந்ததன் பின்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது தமது கட்சியின் வெற்றிக்கு உதவுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கருதுகின்றார்.

இரு கட்சி கூட்டு உடைந்து போவதற்கு பல மாதங்கள் எடுக்காது என்பது தெரிந்த உண்மை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் கூட்டு என்பது அரசியல் கட்சி என்பதற்கு அப்பால், அரசினதும் எதிர்க் கட்சியினதும் கூட்டு என்பது இங்கு முக்கியமானதாகும்.

ஆளுந்தரப்பும், எதிர்க் கட்சியானதும் கூட்டுச் சேர்வது இலங்கையில் சாத்தியப்பாடானது அல்ல. எனினும், உலக நாடுகளின் அழுத்தம்-இணைத் தலைமை நாடுகளின் உதவி கிடையாமல் போய்விடும் என்ற அச்சம் போன்றவை காரணமாக அரசும் பிரதான எதிர்க் கட்சியும் கூட்டுச் சேர்ந்தன.

ஆயினும் கூட்டின் செயற்பாடுகள் ஆரோக்கியமானதாகவில்லை என்பதும்; பொது உடன்படிக்கையின் பிரகாரம் ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடந்து கொள்ளவில்லை என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டும் இரு கட்சி கூட்டின் உடைவுக்குக்கான அறிகுறி எனலாம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டை விலக்கிக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாரானமை உறுதியாகிவிட்டதால், பாராளுமன்றத்தில் தனது கட்சியின் பெரும்பான்மை பலத்தை காப்பாற்றும் சிக்கலுக்குள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அகப்பட்டுள்ளார்.

கூடவே ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களைத் தமது பக்கம் இழுப்பதில் ஜனாதிபதி மகிந்த வெற்றி கண்டு வருவதால் இனிமேலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு வைப்பது அவ்வளவு நல்லதல்ல என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களின் கருத்து.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான பொது இணக்கப்பாட்டிலிருந்து விலகி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி இறங்கும்.

இத்தகையதொரு முடிபை ஐக்கிய தேசியக் கட்சி எடுக்குமாயின், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு நிச்சயம் இருக்கும்.

சிலவேளைகளில் ஜே.வி.பியும் அரசின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கலாம். அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தால்-அதன் வெற்றி உறுதியானால், ஜனாதிபதி பதவிக்கும் அது ஆபத்தாகிவிடும் என்பது மகிந்தவின் சிந்தனையில் இருக்கவே செய்யும்.

எனவே அத்தகையதொரு துர்ப்பாக்கிய நிலை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசுக்கு ஏற்படுவதை ஜனாதிபதி மகிந்த ஒருபோதும் விரும்பவும் அனுமதிக்கமாட்டார்.

மாறாக பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கான அறிவித்தலை விடும் அஸ்திரத்தை அவர் பயன்படுத்தவே முயலுவார்.

ஆக, நாட்டின் தற்போதைய அரசியல் நிலையில் பொதுத் தேர்தலை நடத்தும் நினைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனையில் ஒன்றாகவிருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

# அரசு தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் வெவ்வேறாகவே ஆட்சி செய்து வருகின்றது

## சபையில் சுரேஷ் எம்.பி.குற்றச்சாட்டு

அரசாங்கம் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் வெவ்வேறாகவே ஆட்சி செய்து வருகின்றது. அரசிடம் ஜனநாயகம் இல்லை. பயங்கரவாத ஆட்சியே இடம்பெறுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைப்பாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சபையில் தெரிவித்தார்.

மருந்துப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் அனுப்பாமல் பாதைகளை மூடி பட்டினி போட்டு தமிழ் மக்களை அரசாங்கம் கொலை செய்து வருகின்றது. பண்டா-செல்வா ஒப்பந்தம் முதல் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் இணைப்பை உயர் நீதிமன்றம் சட்ட விரோதம் என பிரித்தமை வரையுள்ள வரலாறுகளை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டிய சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி., கடந்த கால தவறுகளை உணர்ந்து சரியான நடவடிக்கைகளை இனியாவது மேற்கொள்ளுங்கள் என்றும் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

உரத்த சத்தத்துடன் ஆவேசமாக அங்கு உரை நிகழ்த்திய அவர், அரசாங்கத்தின் சமீப கால நடவடிக்கைகளை காரசாரமாக விமர்சித்தார். கடந்த கால அரசுகளின் செயற்பாடுகள் தான் தமிழ் மக்களைத் தமிழீழப் போராட்டத்திற்கு தூண்டியது எனவும் சுட்டிக்காட்டினார்.

தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணத்திலே மக்களுக்கு உணவு இல்லை. அத்தியாவசிய மருந்துகள் இல்லை. ஆனால் அரசு என்ன கூறுகின்றது? யாழ்ப்பாணத்திற்கு உணவுகளை அனுப்பி விட்டோம். அங்கு தாராளமாக உணவுகளும் மருந்துகளும் இருக்கின்றன என்று பொய் கூறுகின்றது.

அங்கு உணவுப் பொருள்களின் விலை பல மடங்குகளாக அதிகரித்துவிட்டன. குழந்தைகளுக்கான பால்மா இல்லை. மக்களுக்கு உணவுகளையும் மருந்துகளையும் அனுப்பாத இந்த அரசு தேவைதானா?

யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருள்களை அனுப்புங்கள், வாகரைக்கு உணவுப் பொருள்களை அனுப்புங்கள் என சர்வதேச தொண்டு நிறுவனங்களும் சர்வதேச நாடுகளும் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டது. ஆனால் இராணுவம் அனுமதிக்கவில்லை.

இந்த அரசின் நோக்கம் என்ன? யாழ்ப்பாணத்திலும் வாகரையிலும் பட்டினி போட்டு மக்களை கொலை செய் வதுதான் நோக்கமா? இவர்கள் ஜனநாயகம் பேசுகின்றார்கள். ஜனநாயக அரசு என்கின்றார்கள். ஆனால் புலிகள் பயங்கரவாதிகள் என்கின்றார்கள் என தனது உரையில் தெரிவித்துள்ளார். (ச)

# கண்காணிப்புக் குழுவை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தம் விடுதலைப்புலிகளுக்கு சம அந்தஸ்து வழங்கியுள்ளது. இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஐந்து வருட காலம் நிறைவடையப் போகின்றது. இவ்வாறு அதிககாலம் ஒப்பந்தம் நடைமுறையிலிருப்பது எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு தனி ஈழம் அமைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விடும் என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளருமாகிய விமல் வீரவன்ச தெரிவித்தார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தேவையில்லாமல் தொடர்ந்தும் கடைப்பிடிக்காமல் கண்காணிப்புக்குழுவினரையும் நாட்டை விட்டு வெளியேற்றி புலிகளையும் தோற்கடிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் விரைந்து எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கொழும்பு நூலக ஆபணாக்கள் நிலையத்தில் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் கூறியதாவது;

அரசாங்கம் இன்று வடக்கிலும்கிழக்கிலும் புலிகளுக்கு எதிராக முடக்கி விட்டுள்ள தாக்குதல்களையிட்டு நாம் மகிழ்வடைகின்றோம். அதற்கான நன்றியையும் நாம் ஜனாதி பதிக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் இரு நிலைப்பாட்டில் உள்ளது. அரசின் செயற்பாடுகள் தெளிவில்லாமல் உள்ளன. திஸ்ஸ விதாரண என்னும் தனி மனிதர் ஒருவர் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை தயாரிக்கின்றாராம். இது புலிகளுக்குத் தனி நாட்டை வழங்குவதற்கான முயற்சியின் மறுவடிவமாகும்.

இன்னொரு பக்கத்தில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் உள்ளது. கண்காணிப்புக் குழுவிற்கு அமைச்சர் ஹெகலிய ஊடகவியலாளர்களைக் கூப்பிட்டு ஏசுகின்றார்.

சிங்களத்தில் ஏசினால் கண்காணிப்புக் குழுவிற்கு விளங்குமா? விளங்காது. மேலும் அவர்கள் ஆங்கிலப் பத்திரிகைகள் படிக்கும் அளவிற்கு அறிவாளிகளும் அல்ல. அவர்களை இங்கேயே வைத்துக் கொண்டு அவர்களுக்கு ஏசும் ஹெகலியவுக்கும் வெட்கமில்லை. ஏச்சுக்கும் பேச்சுக்கும் மத்தியில் இன்னும் இங்கே தமது கூடாரத்தை அடைத்துக் கொண்டு இருக்கும் கண்காணிப்புக் குழுவிற்கும் வெட்கமில்லை.

வெட்கம் இருப்பவர்களாக அவர்கள் இருந்தால் என்றோ அவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறிவிடுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# வெளியுறவுத்துறைச் செயலாளராக ஹோகன்னவை நியமிக்கத் திட்டம்!

## மங்கள சமரவீர எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகாரத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் அமைச்சில் இரண்டாம் நிலைப் பதவியான வெளிவிவகாரத் துறைச் செயலாளர் வெற்றிடத்தை ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகரான பாலித ஹோகன்னவை நியமிக்கும் மகிந்தவின் யோசனையை மங்கள சமரவீர நிராகரித்துள்ளார்.

அரச சமாதான செயலகப் பணிப்பாளராகவும் மகிந்தவின் சிறப்பு ஆலோசகராகவும் தற்போது பதவி வகித்து வரும் பாலித ஹோகன்னவை மகிந்தவின் பிரத்தியேக திட்டமிடலின்படி வெளிவிவகாரத் துறைச் செயலாளராக நியமிக்கவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இருப்பினும் இந்தச் செய்தியில் உண்மை எதுவும் இல்லை என்று வெளிவிவகாரத் துறை அமைச்சு அறிவித்துள்ளது. மகிந்தவுடன் மங்கள சமரவீர கடந்த சனிக்கிழமை விரிவான பேச்சுக்களை நடத்தியபோதிலும் பாலித ஹோகன்ன நியமனம் தொடர்பாக ஆராயப்படவில்லை என்று தெரிவித்துள்ள வெளிவிவகாரத் துறை அமைச்சு, இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக றொமேஸ் ஜயசிங்க நியமிக்கப்படுவது மட்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

பாலித ஹோகன்னவை புதிய செயலாளராக நியமிக்க மங்கள இணங்கியிருப்பதாக நேற்று முன்தினம் வெளிவந்த செய்தியையும் வெளிவிவகாரத் துறை அமைச்சு நிராகரித்து, வெளிவிவகாரத் துறைச் செயலாளர் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்ற போதிலும், வெளிவிவகாரத் துறை அமைச்சு சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அனுபவமில்லாத பாலித போன்றவர்களை நியமிப்பது தவறான முன்னெடுப்பு என்று மங்கள கருத்துத் தெரிவித்துள்ளார். (ச-5)

# கப்பலில் எடுத்து வரப்படும் பொருள்கள் நேரடியாக கூ.சங்கங்களுக்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கப்பலில் எடுத்து வரப்படும் பொருள்கள் அரச அதிபரினால் நேரடியாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதனால் அப்பொருள்களின் விநியோகத்தை விரைவாக மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

துறைமுகத்திலிருந்து அரச களஞ்சியத்திற்கு எடுத்துச் செல்லப்படாமல் நேரடியாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதால் எடுத்து வரப்படும் பொருள்கள், அளவு என்பன கண்டறிந்து பங்கீட்டுக்கான விநியோக அளவை தீர்மானிக்கக் கூடியதாகவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# அனைத்துக்கட்சிகளும் ஒன்றிணைந்து சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலும் பயங்கரவாத செயற்பாடாகவே அடையாளம் காணப்படும் என இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பேருந்துக்கள் மீதான தாக்குதல்களை கண்டித்துள்ள அமெரிக்க தூதரகம் வாகரையில் இடம் பெற்று வரும் தாக்குதல்களால் பொதுமக்கள் தாங்கவொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருவதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ,ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு ஆகியன இணைந்து தங்களது முழுமையான கவனத்தையும் அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஒரு இறுதித்தீர்வுத் திட்டத்தையும் முன்வைத்து சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் முயற்சிகளின்பால் திருப்புவது அவசியம் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமானதல்ல என்று மீண்டும் தெளிவாகக் கூறியுள்ள அந்த அறிக்கையில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பாக அமெரிக்கா கருதுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25 வருடகால பயங்கரவாத செயற்பாடுகளை தமிழ் மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தைக் கொண்டுவரவில்லை. வாகரை போன்ற பகுதிகளில் இடம் பெற்று வரும் தாக்குதல்களும் பொதுமக்களும் மிக மோசமான துன்பங்களை ஏற்படுத்துகின்றன.

எமது கருத்தின்படி பேச்சுவார்த்தை மூலம் இலங்கையில் வாழும் அதனைத்து சமூகத்தினரின் அபிலாசைகளையும் தீர்த்துவைக்கக்கூடிய ஒரு நிரந்தரத் தீர்வை எட்டவேண்டும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான ஒரு தீர்வுத் திட்டத்தை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் உதவியுடன் விரைவாக முன்வைக்க வேண்டும்.

அதன் அடிப்படையில் யுத்த நிறுத்தம் முழுமையான நடைமுறைக்கு வரவேண்டும் இத்தகைய ஒரு சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்க வேண்டும் இவ்வாறு அமெரிக்க தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ச-5)

# பரீட்சை மண்டபம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை மறுதினம் நடைபெறவிருந்த இலங்கை கணக்காளர் சேவை வகுப்பு II தரம் IIக்கு ஆட்சேர்ப்புக்கான திறந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் அதே தினத்தன்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ச-3)

# கூட்டுறவுச் சங்க விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைக் குழுக்கான விசேட கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச-5)

# இராணுவ காவலரண்களுக்கு முன் மோ.சைக்கிள்கள் தடுத்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள இராணுவ காவலரண்களுக்கு முன்பாக மோட்டார் சைக்கிள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்களை காவலரண்களுக்கு முன்பாக நேற்று வழி மறித்த இராணுவத்தினர் மோட்டார் சைக்கிள்களை அவ்விடத்தில் நிறுத்தி விட்டு இன்று வருமாறு கூறியதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் அரச ஊழியர்களை மோட்டார் சைக்கிளுடன் செல்ல அனுமதித்ததாகவும் கூறப்பட்டது. இதன் காரணமாக பொருமளவான மோட்டார் சைக்கிள்கள் சில காவலரண் முன்பாக காணப்பட்டன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மோட்டார் சைக்கிள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (எ-1)

# பொருளாதாரத்தை சீரழிக்கும் இலங்கையின் பாதுகாப்பு செலவு

## மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகரித்த பாதுகாப்புச் செலவும் இடம் பெற்று வரும் போரும் இலங்கையின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதித்துள்ளதாகவும் ஒவ்வொரு தடவையும் ஏவப்படும் பல்குழல் எறிகணைகள் நூறு தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்களை நாட்டில் இழக்கச் செய்வதாகவும் மூத்த அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது; அரசு இராணுவ நடவடிக்கையில் ஆர்வம் கொண்டு உள்ளது. எனினும் இறுதித் தீர்வு அரசியல் வழிகளிலேயே எட்டப்பட முடியும்.பல்குழல் எறிகணை செலுத்திகளின் தாக்குதலை பார்க்கும் போது எமக்கு திரிலாக இருக்கலாம். ஆனால் அதற்கு நாம் செலுத்தும் விலைகளை எவரும் எண்ணிப்பார்க்கவில்லை.

இந்த வருடத்தின் பாதுகாப்புச் செலவு 139.56 பில்லியன் ரூபாய்கள் எனினும் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்கள் ஆயுதங்களின் உபயோகத்தை பார்க்கும் போது இது மேலும் அதிகரிக்கலாம் என தோன்றுகின்றது.

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து கனரக ஆயுதங்களின் பாவனையை அரசும் விடுதலைப்புலிகளும் அதிகரித்துள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் பாதுகாப்புச்செலவு 28 வீகிதம் அதிகமானது. ஆனால் 2008 ஆம் ஆண்டுக்குரிய பாதுகாப்பு செலவு 143.46 பில்லியன் ரூபாய்கள் ஆக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார் அவர். (ச)

# உலக சந்தை விலைக்கேற்ப எரிபொருள்களின் விலை மாற்றம்

(கொழும்பு)

உலக சந்தையில் நிலவும் மசகு எண்ணெய்யின் விலையைக் கருத்திற்கொண்டு எரிபொருள் விலையை குறைப்பதற்கு கவனம் செலுத்துவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்போது கையிருப்பில் இருக்கும் எரிபொருட்கள் முடிந்தவுடன் எரிபொருட்களின் விலையை குறைக்க தீர்மானித்துள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.எரிபொருட்களின் விலைகளில் அடிக்கடி மாற்றம் ஏற்படுவது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-5)

## மனிதாபிமான சட்டங்களை...

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டள்ளதாவது; இலங்கையில் அதிகரித்துள்ள வன்முறைகள் காரணமாக சிவிலியன்கள் கொல்லப்படுவதும் படுகாயப்படுத்தும் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்தியுள்ளது.

மோதல்களில் எவ்வாறேனும் நேரடியாகச் சம்பந்தப்படாத ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் அண்மைக்காலமாக இடம் பெறும் ஷெல் தாக்குதல்களினாலும் குண்டுத் தாக்குதல்களினாலும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை அனைத்து நேரங்களிலும் உறுதிப்படுத்தி சர்வதேச மனிதாபிமானங்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய கடமை அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு என்பதுடன் அதற்கு மதிப்பளிக்க வேண்டிய கடப்பாடும் அனைத்து தரப்பிற்கும் உண்டு என்பதுடன் இவற்றுக்கு அனைத்துத் தரப்பினரும் மதிப்பளிக்கவேண்டும் என்றும் நாம் அவசர வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மேலும் கிழக்கில் வாகரையில் யுத்த வலயத்திற்குள் அகப்பட்டு சுமார் பதினைந்தாயிரம் மக்கள் உணவு, மருந்து மற்றும் குடிப்பதற்கு சுத்தமான நீர் கூட அற்ற அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந்த நிலைமைகளை மிகக் கவனமாக கண்காணித்து வருகின்றது. இந்த மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்க செஞ்சிலுவைச் சங்கம் சாத்தியமான எந்தத் தருணத்திலும் தயாராகவே உள்ளது என குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## உதவி...

கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைத்துவத்தை கொண்டுள்ள ஜேர்மனி இலங்கை அரசாங்கம் சமாதான முயற்சிகளுக்கு திரும்பும் வரையில் உதவிகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## மக்களின்...

இதனைத் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் அரசாங்கம் தமக்குரிய கடமைகளினை மறந்து வடகிழக்கைப் பிரித்து தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஏற்கனவே வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டதன் மூலம் தமிழ்மக்களுக்கு நேர்ந்த அநீதி தவிக்கப்பட்டதாகவும் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார். (ச-3)

## இத்தாலி...

இத்தாலிய உதவி வெளிவிவகார அமைச்சர் வேர்னெடி அரச உயர் அதிகாரிகளை சந்தித்து இத்ஹடலிய நிதியுதவியுடன் இலங்கையில் இடம் பெறும் சுனாமி மீள் நிர்மாண பணிகள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக பாணாந்துரை, அக்குறண, தொடகமுவ பேரலிய பகுதிகளிற்கு விஜயம் செய்து மீள்நிர்மாண பணி•ளை பார்வையிடவுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோளையடுத்து வேர்னெடி இலங்கை விஜயம் செய்துள்ளதாக அரச தரப்பு தெரிவித்துள்ளது. (ச-5)

## இந்தியாவிலிருந்து...

சமூக சேவைகள் அமை ச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நேற்று முன்தினம் இரு நாள் விஜயம் மேற்கொண்டு வந்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை மாலை சந்தித்து பேசிய சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊர்காவற்றுறை துறைமுகத்தில் பொருட்களை இறக்குவது தொடர்பாக ஆலோசித்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணத்திற்கு இந்தியவிலிருந்து பொருட்கள் எடுத்துவரப்படுவதனால் விரைவாக பொருட்கள் வந்து சேர்வதுடன் விலைகளும் குறைவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என இச் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி நாடு திரும்பியதும் இதற்காக உரிய அதிகாரிகளுக்கு கட்டளை இடுவதாகவும் தெரிவித்துள்ளார்.அத்துடன் கப்பல் தரித்து நிற்பதற்கு ஏற்ற சூழ்நிலை குறித்து ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (எ-1)

## இனப்பிரச்சினையில் தலையிட...

இந்தியாவின் காஷ்மீர் பிரச்சினையை இந்திய அரசு போர் ரீதியாகக் கையாள்கின்றது காஷ்மீர்,குஜராத் பகுதிகளில் இந்திய இராணுவத்தினரால் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள்.

இவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிராக நடந்து கொள்ளும் இந்திய அரசு எவ்வாறு இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரிப்பில் தலையிட முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். தமது நாட்டிலேயே பல பிரதேசங்களை பிரித்து வைத்திருக்கும் இந்தியா,இலங்கையில் வடக்கு -கிழக்கை இணைக்கக் கோருவதற்கு எந்தவிதமான அருகதையும் அற்றது.

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தை போராக மாற்றிய பெருமை இந்தியாவையே சாரும். விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கி போருக்கு இந்தியாவே தூண்டியது. அதனால்தான் எமது நாடு இன்றுவரை அவதிப்படுகின்றது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மறைவுக்கு பிரபாகரன் வன்னியில் உரையாற்றியதை லண்டனில் நேரடியாக ஒளிபரப்புச் செய்தார்கள். இந்த ஒளிபரப்பு வசதிகளை விடுதலைப் புலிகளுக்குப் பெற்றுக்கொடுத்தது யார்? இந்த ஒளிபரப்புச் சாதன வசதிகளை சமாதான காலத்திலேயே விடுதலைப்புலிகள் பெற்றுக்கொண்டார்கள்.

லக்ஸ்மன் கதிர்காமரை ஒரு ஆங்கிலப் படப் பாணியிலேயே பிரபாகரன் கொலை செய்தார். அந்த ஆங்கிலப் படத்தை நோர்வே அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் அன்பளிப்புச் செய்த ஆறு அடி தொலைக்காட்சியிலேயே பிரபாகரன் பார்த்தார் என அவர் தெரிவித்துள்ளார். (எ-5)

## கடத்தப்பட்ட...

குழுவிற்கு அறிவித்துள்ளார்.

இவரை கடத்தி சித்திரவதை செய்தவர்கள் தொடர்பான விபரங்களை வெளியிட இவர் மறுத்து விட்டதாகவும் ஏனைய மாணவர்களுக்கும் இதுபோன்ற துன்பம் நிகழ்ந்து விடக்கூடாது என்ற நோக்குடன் அல்லது கடும் பயமுறுத்தல் காரணமாக இந்த விபரங்களை இவர் கூறாதிருந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தை மீள திறந்து இயங்கு நிலைக்குக் கொண்டு வருவதாக இருந்தால் கடத்தப்பட்ட மாணவன் விடுவிக்கப்படுவது உட்பட மாணவர்களின் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் வழங்கவேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடந்த செவ்வாய்க்கிழமை வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.